
# How to Draw



BY S. NADARAJAH
—ART MASTER.

# வரைவது

750
நடரா
SL|PR

# எப்படி வரைவது
## HOW TO DRAW

நூலாக்கம்

திரு. எஸ். நடராசா, (எஸ். என். ஆர்)
RETIRED ART MASTER. (S. N. R.)
**Teacher Certificate in Art of Sri Lanka.**
**&**
**Teacher Certificate in Fine Arts & Crafts of Madras, India.**

MANIPAY.

**Jaffna Dist,** **Sri Lanka.**

**1999** Rs. 80/-

# வணக்கம்

# ஸ்தோத்திரம்

எறியக் கூடியவன் கையில் பொல் இல்லை.

ஒரு சிறு கல் கூட இல்லை.

இருந்தும்,

ஒரு சிறு கற் தூசுச் சொட்டே

கிடைத்தது.

அதற்கமைய,

எல்லாம் வல்ல இறைவனுக்கு

ஸ்தோத்திரம்.


# ஓவியம்

பூவிலே மாந்தர் சீவியம்
புனிதமே பொங்கும் இன்ப ஓவியம்
தாவும் மானும் வெண்ணிலாவும்
காவினில் வண்ணப் பூவும் ஈசன் ஓவியம்
விண்ணிலே மின்னும் தாரகை
வீசுமே பொன் போலும் இன்ப ஓவியம்
மண்ணிலே மங்கிடாத அழகின் ரூபமே
மலருமே புதுமை சிந்தும் ஓவியம்


இசை.

முதியோரைக் கனம் பண்ணு.






தாயின் அன்பு.

# இருப்பவை

## முதற் கண்

1. வணக்கம்
2. ஸ்தோத்திரம்
3. ஓவியம்
4. இசை
5. முதியோரைக் கனம் பண்ணு
6. தாயின் அன்பு

## அறிய வேண்டியவை

1. நூல் ஆசிரியர் விபரம்
2. நூலாசிரியர் கற்பித்த உயர் கல்லூரிகள்
3. சாதனை
4. ஆலோசனை
5. அ. இ. சி. ஆ. ச. படம்
6. நூலாசிரியர் உரை
7. பாராட்டு ஆங்கிலம்
8. பாராட்டு (தமிழாக்கம்)
9. அணிந்துரை
10. அணிந்துரை
11. கண்காட்சிப் படம்
12. பாராட்டு
13. வாழ்த்துப் பா
14. பாராட்டு
15. பாராட்டு
16. கண்காட்சிப் படம்
17. பாராட்டு
18. வாழ்த்துப் பா
19. பாராட்டு
20. நன்றிக் கடன் 1
21. வரை படம்
22. நன்றிக் கடன் 2
23. வர்த்தமானப் பத்திரிகைப் பிரதி

# எப்படி வரைவது

1. மகிமை.
2. வரைவதற்குத் தேவையானவை.
3. நிலை — சாதனம்.
4. சிறு பிள்ளைகள்
5. இப்படியும் வரையலாம்.
6. அறிவு
7. பாடசாலைகளில் சித்திரம்.
8. கருத்து வெளிப்பாட்டுச் சித்திரம்.
9. இதுவும் ஒரு முறை.
10. அலங்காரம்.
11. பொருள் சித்திரம்.
12. இதுவும் ஒரு வழி,
13. உயிரோவியச் சித்திரம்.
14. உருவம் செய்தல்.
15. சித்திர ஆசிரியர்.
16. பொது.
17. குறிப்பு.
18. கலை.



# நூல் ஆசிரியர் விபரம்

**திரு எஸ். நடராசா (எஸ். என். ஆர்.)**
ஓய்வூதியம் பெறும் ஆசிரியர்

இலங்கை அரசினர் சித்திர ஆசிரியர்
தராதரப் பத்திரம் 1957
கலை, கைப்பணி ஆசிரியர் தராதரப் பத்திரம்
சென்னை, இந்தியா

**மற்றும்**

காங்கேசன்துறை வட்டாரக் கல்வி கலைக் கண்காட்சிப் பொறுப்பாளர் 1973
அகில இலங்கை சித்திர ஆசிரியர் சங்கக் காரியதரிசி 1961
வடமாகாண சித்திர ஆசிரியர் சங்கக் காரியதரிசி 1967

**MR. S. NADARAJAH (S. N. R.)**
Retired Teacher

Teacher Certificate in Art of Sri Lanka. 1957
Teacher Certificate in Fine Arts & Crafts of Madras, India.

Kankesanturai Curcuit Respondent of Exhibition in Art Education 1973.

All Ceylon Art Teacher's Union Secretary 1961.
Northern Province art Teacher's Association Secretary 1967.

## TEACHER SERVED IN HIGH COLLEGES

Central College, Jaffna.

St./ Peter's College, Bampalapitiya, Colombo 4.

Skandavarothaya College, Chunnakam.

Nadeswara College, Kankesanturai.

Madhya Maha Vidyalayam, Vayavilan.

## நூல் ஆசிரியர் கற்பித்த உயர் கல்லூரிகள்

யாழ் / மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.

சென்/பீற்றர் கல்லூரி, பம்பலப்பிட்டி கொழும்பு 4

ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்.

நடேஸ்வராக் கல்லூரி. காங்கேசன்துறை.

மத்திய மகா வித்தியாலயம், வயாவிளான்.



## சாதனை

### ஓவிய விடயத்தில் இந்நூல் ஆசிரியர் ஆற்றிய ஒரு சில முக்கிய சாதனைகள்

1. 1990 இல், நோர்வேயில் நடந்த சித்திரப் போட்டியில் ஆறுதல் பரிசு பெற்றமை.
2. 1956 இல் கொழும்பில் நடந்த அகில இலங்கை தேசிய சேமிப்பு வங்கிச் சித்திரப் போட்டியில் ஆறுதல் பரிசு பெற்றமை.
3. 1981 இல் அகில இலங்கை 50 வது சர்வஜன வாக்குரிமைச் சித்திரப் போட்டியில் ஆறுதல் பரிசு பெற்றமை.
4. 1981 இல் உலக உணவு ஸ்தாபன அகில இலங்கைச் சித்திரப் போட்டியில் ஆறுதல் பரிசு பெற்றமை.

மேற்படி ஆசிரியரின் மாணவர் சாதனைகளை அந்தந்தக் கல்லூரி அதிபர்கள் இந்நூலில் குறிப்பிட்டுள்ளார்கள்.

# ஆலோசனை

சித்திரம், சங்கீதம், நடனம், கற்பித்தல் சம்பந்தமான குழுவிற்கு சித்திரம் பற்றிய கருத்துக்களை இந்நூல் ஆசிரியர் சமர்ப்பித்திருந்தார் அதன் கருத்துக்களுட் சிலவும், குழுவின் பதிலும் இங்குள்ளன.

## குழுவின் பதில்

Mr. S. Nadarajah, Art Teacher
Nadeswara College
Kankesanturai.

My No. Art M / N/ Committee 2/30
Foreign Agencies Branch
Ministry of Education,
Colombo - 2

16th September 1970

Sir,

**Committee of Inquiry in to the Teaching of Art, Music and Dancing in Ceylon.**

I am directed by the above Committee to acknowledge the reference of your letter dated 12-9-1970

2. Please quote reference to the above number. if any further Correspondence is done on the matter.

I am
Your Obedient Servant
Sgd. H. H Bandara
(Secretary to the Committee)



# சமர்ப்பித்த ஆலோசனைகளிற் சில


1. i) சித்திரக்கலை பற்றிய புத்தகங்களை தக்க ஆதாரங்களுடன் வெளியிடுதல். இப் புத்தகங்களை அரசு மூலமும், தனிப்பட்டவர்கள் மூலமும் வெளியிடுதல்

ii) வெளியிடும் புத்தகங்களுக்கு உரிய சன்மானம் அரசினால் வழங்கப்படலும், போட்டியில் புத்தகங்களைத் தெரிவு செய்து பரிசில் வழங்கலும்.

iii) உயர் கல்வி நிலையங்களில் சித்திர விரிவுரையாளர்களை நியமிப்பதும் அவசியம் சர்வகலாசாலைவரை சித்திரக் கலை கற்க வழி வகுத்தலும். மாணவர்கள் கற்கக் கட்டாயப்படுத்தலும். நாட்டில் உள்ள சகல பாடசாலைகளிலும் சித்திரம் கற்க ஆவன செய்வதும், தரத்திற்கேற்ப சித்திர ஆசிரியர்களை நியமிப்பதும்.

iv) வருடந் தோறும் பாடசாலை ரீதியிலும், மாவட்ட ரீதியிலும், அகில இலங்கை மட்டத்திலும் சித்திரப் போட்டிகளை அரசு நடத்திப் பரிசில் வழங்கலும், ஓவியக் கலைஞர்களுக்கு விருது, சன்மானம் வழங்கலும், எம் நாட்டில் ஆக்கிய உயர் சித்திரங்களை அந்நிய நாடுகளுக்கு அனுப்பி, அங்கு விற்று அந்நிய செலாவாணியை ஏற்படுத்தலும்.

v) சித்திரக் கலை பயிற்றல், கற்றல் மற்றும் விடயங்களில், ஏதும், நீதியற்ற செயல்கள் செய்தால், செய்யப்பட்டிருந்தால், அவைகளை விசாரித்து உரிய நீதி, நியாயம் வழங்க முற்படல்.



**ALL CEYLON ART TEACHER'S UNION COMMITTEE MEMBER'S, WITH PRESIDENT & SECRETARY. (1961)**

SEATED FROM LEFT TO RIGHT.
MR. M. BANDA, KANDY — MR W. SENARATNA, GAMPOLA — MR. F. S. PONNAMPERUMA, GALLE — PRESIDENT MR. S. A. WICKRAMASINGHA, KANDY — SECRETARY MR. S. NADARAJAH, JAFFNA — MR. P. K. ARIYARATNA, WATTALA — MRS. H. P. SENARATNA, COLOMBO.

# நூலாசிரியர் உரை

எல்லோர்க்கும் நன்மை செய்யப் பிறந்த நீ, தீமையாவது செய்யாதிரு.

என்பதற் கிணங்க நான் விட்டுச் செல்லும் நன்மை யென்ன?

காதற்ற ஊசியும் கடை வழிக்குத் தன்னும் வரா. படலை மட்டும் மனைவி, சுடலை மட்டும் பிள்ளை.

பிறக்கும் போதும் அழுகின்றாய் இறக்கும் போதும் அழுகின்றாய். இதன் பொருள் என்ன?

இறப்பதற்காவா? இங்கே பிறந்தோம் நாம். அம்மா! அம்மா! ஐயா பசிக்கிது, பசிக்கிது. பாலும் பழமும் வேண்டாம் தாயே. பசிக்குச் சோறொருபிடி போட்டால் போதும், அம்மா. தாயே பசிக்கிது பசிக்கிது.

போ வெளியே வசதியில்லை. போறன் போறன், ..............................

என்ன உலகமடா? ஏழைக்கு நரகமடா.

இதன் குணமென்ன?

ஊனைத் தின்று ஊனை வளர்ப்பது சொல்ல முடியாத பாவம். — ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் திருப்பிக்கொடு. அவனன்றி அணுவும் அசையாது. — இவையெல்லாம் என்ன கருத்து

பணக்காரன் பரலோகத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும், ஒட்டகம் ஊசியின் காதில் நுழைவது எளிதாயிருக்கும் என்கிறார்கள் அறிஞர்கள்.

பழம் ஓலை விழ, குருத்தோலை சிரிக்கிறது. அரிச்சுவடி. பட்டோலை துவக்கியளித்த ஆசிரியரை. அ. ஆ, தான் அவருக்குத் தெரியுமென்றும், இவருக்கு ஏ. பி. சி தான் தெரியுமென்றும், அவரிடம் படித்த விடலைப் பருவம் பரிகாசம் செய்யுது. அந்தா — போறார் கீறுறவர் என்று கனைத்துக் கூக்குரல் போடுது ஒரு பக்கம். பிழை கூறும் பேர்வழிகள் மாற்று நல்வழி கூறாமல் பிழை கூறுவதும் ஒரு வித கலை என்று கூறுகிறது இன்னொரு பக்கம்.

இதன் மத்தியிலே என் ஆர்வத்தை ஓவியக் கலை ஓரமாய் நூலொன்று ஒளியிடட்டுமென எண்ணினேன். ஆனால், ஓவியக் கலைக்குக் கரை காண முடியாது. தொடக்கம் முடிவு தெரியாது. இது என் அனுபவம் அபிப்பிராயம். திறமையும் முயற்சியுமே வெற்றிக்குத் திறவு கோல் — என்ற ரீதியில், என் அற்ப சொற்ப அறிவு. ஆற்றல், அனுபவம், துணிச்சல். நேர்மை, ஒழுங்கு போன்றவைகளை மையமாக வைத்து இச் சிறு நூலை வெளியிட முன் வந்தேன். நீண்ட. கால முயற்சியிது. பெருமளவில் வெளியிட, பொருளாதாரம், கால நிலை குறுக்கே நிற்கின்றன. ஆனால், துணிச்சல் வீறு நடைபோட முன் நிற்கிறது.

இந்நூலை விற்று, பொருள், புகழ், பெருமை தேடவேண்டுமென்பதல்ல என் இலட்சியம். சமூகத்துக்குச் செய்யும் மிக மிகச் சிறிய தொண்டேயிது.

சுதந்திரம், காசு கொடுத்து கடையில் வாங்கும் பொருளல்ல. தியாகமே அடிமையின் உடைப்பே சுதந்திரம். அதன் உருவின் அமைப்பே இந் நூல்.



இதில் அதிக சொட்டுக்களில்லை, இக்கலையைப் பாராட்ட. நூலின் பெயருக் கேற்றபடி ஓரிரு சொட்டுக்கள் மாத்திரமே மின் மினிப் பூச்சியின் ஒளி போல மினுங்குகின்றனவேயன்றி பெரு வெளிச்சமல்ல. பெரு ஆல மரத்துக்கு சிறுகாய் தான் காய்க்க முடியும். ஆனால் சிறு பூசினிக் கொடியோ பெரிய காய் காய்க்கும்.

இச் சிறு நூல் மூலம் பெறக் கூடியதைப் பெறுவோம் என்பவர்களும், சரித்திரம் எழுதும் அறிஞர்களும் மற்றும் விடயங்களை, அறிந்த, அறியாதவர்கள் அறியட்டும் என்பதற்காக, எதிர் காலச் சந்ததியினருக்காக என் விபரங்களையும், மற்றும் விடயங்களையும் விட்டுச் செல்கிறேன்.

நல்ல நினைவு, பேச்சு, செயற்பாடு ஆகிய இம் மூன்றும் போதும் இச்சிறியேனுக்கு.

இந் நூலை ஆக்க உதவிய அனைவர்களுக்கும் நன்றி.

வணக்கம்.

**எஸ். நடராசா (எஸ். என். ஆர்.)**

**14 - 07 - 1999.** நூலாசிரியரும், பதிப்பாளரும்.

**வயாவிளான் மத்திய மகா வித்தியாலய அதிபர்**
**திரு. ஏ. இராமசாமி பி. ஏ. அவர்கள் அளித்த**

# பாராட்டு

**Vayavilan Mudhya Maha Vidyalayam**
*A. Ramasamy*
Principal.

Mr. S. Nadarajah was on my staff from 1 2 76 to 15-8-79. He is a Teacher of Art and is now Retired. He is a Teacher's Certificate in Art of Sri Lanka, and a Teacher Certificate in Fine Arts & Crafts of Madras, India.

A Painstaking and methodical Teacher. He has imprued the intense enthusiasm he Possesses into the young ones under his charge.

He organised Several Competitions at the class, School, Provincial and all Ceylon levele and I am Proved to say the children wan places and Commentations at these Competitions. Affable but firm he set a noble example to the children and the standard of Art, did improve tremendously after he took charge of the subject.

I have great pleasure in recommending him to anyone who wish to get his Services. He does not even avail himself of the leave that is at his disposal. for the year 1979 he had not taken any leave at all.

He bears a good moral Character.

Sgd. A Ramasamy
Principal



## தமிழாக்கம்

**திரு ஏ. இராமசாமி (பி. ஏ.)**
அதிபர்
மத்திய மகா வித்தியாலயம்
வயாவிளான்.

திரு. எஸ் நடராசா எங்கள் கல்லூரியில் 01-02-76 இல். இருந்து 15-08-79 வரை சித்திர ஆசிரியராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளார்.

அவர் இலங்கை சித்திர ஆசிரியர் தராதரப் பத்திரத்தையும், சென்னை இந்தியா, கலை. கைப்பணி ஆசிரியர் தராதரப் பத்திரத்தையும் உடையவர்.

அவர் தன்னிடமுள்ள கலை ஆர்வத்தைக் கடின உழைப்புடனும், உற்சாகத்துடனும், விடாமுயற்சியுடனும், இலகுவில் மாணவர்களுக்குப் புகட்டுவதில் வல்லவராய் இருந்தார்.

இதனால் யாழ் பாடசாலை மட்டத்திலும், அகில இலங்கை மட்டத்திலும், நடந்த சித்திரப் போட்டிகள் பலவற்றிலும் பல வெற்றிகளை எங்கள் கல்லூரி மாணவர்கள் பெற்றார்கள் என்பதைக் கூறுவதில் பெருமையும், மகிழ்ச்சியும் இடைகின்றேன்.

அவர் தனது நடை, உடை முறையிலும் கௌரவமான. குண. ஒழுக்கத்திலும் மாணவர்களுக்கும், மற்றவர்களுக்கும் ஒரு முன்மாதிரியாக

விளங்கினார். இப்படிப்பட்டவரின் சேவையைப் பெற விரும்புபவர்களுக்கு சிபார்சு செய்வதில் நான் மகிழ்ச்சியுடைகின்றேன்.

விசேடமாக 1979 ஆம் வருடம் ஒரு நாளும் எது வித லீவும் (விடுதலை) எடுக்கவில்லை என்பதைக் கூறுவதில் பெரும் சந்தோஷப்படுகிறேன்.

அவர் மிகவும் உத்தம ஒழுக்கமுடையவரும், பண்புடையவருமாவர்.

இப்படிக்கு
ஒப்பம். ஏ. இராமசாமி
அதிபர்.

28-8-79



ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப்பணிப்பாளர்
திரு. சி. தியாகராசா பி. ஏ. அவர்கள் அளித்த

## அணிந்துரை

நானும், ஆசிரியர் திரு எஸ் நடராசா அவர்களும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் ஆசிரியர்களாகப் பணியாற்றினோம்.

நான் காங்கேசன்துறை வட்டாரக் கல்வி அதிகாரியாகக் கடமையாற்றியபோது திரு நடராசா அவர்களும், காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் சித்திர ஆசிரியராகவும், காங்கேசன்துறை வட்டார சித்திரக் கலைக் கண்காட்சிப் பொறுப்பாளராகவும் 1973 ம் ஆண்டு கடமையாற்றினார்.

அங்கே ஒருநாளும் ஓய்வு (லீவ்) எடுக்காமல் தொடர்ச்சியாக ஆறு வருடங்கள் (1970—1975) கடமையாற்றி அரசின் நன் மதிப்பைப் பெற்றவர். இதை கல்வி இலாகா ருசுப்படுத்தும். அவர் தற்சமயம் ஆக்கியுள்ள ''எப்படி வரைவது'' என்னும் சித்திரம் பற்றிய நூல் மிகவும் பிரயோசனம், உண்மை, அறிவுடைமைகளாகும்.

மேலும் ஓவியக்கலைக்குப் பல பணிகள் ஆக்கியுள்ளார். இவைகளினால் நான் அவர் மீது அதிகம் சந்தோஷமடைகிறேன்.

இவரின் நற்பணி தொடர்ந்தும், எமது சமூகத்துக்கு நற்பணி ஆற்றவேண்டுமென்று, இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

இப்படிக்கு
18-3-95 ஒப்பம் சி. தியாகராசா

**கே. வீரசிங்கம்**
முன்னாள் சித்திரப் பேராசிரியர்
வட்டுக்கோட்டை.
*10-07-91*

# அணிந்துரை

திரு. எஸ். நடராசா ஒரு சிரேஷ்ட சித்திர ஆசிரியரும், பிரபல ஓவியக்கலைஞரும், எனது நெருங்கிய நண்பருமாவார்.

அவரை நன்கு தெரியும். ஓவியக்கலைக்கு அளவிடக்கரிய நற் பணிகள் பல ஆக்கியுள்ளார். அவர் காரியதரிசியாகவும், நான் உப தலைவராக வும், வட மாகாகண சித்திர ஆசிரியர் சங்கத்தில் பணியாற்றியிருக்கிறோம். அவர் உயர் கல்லூரிக ளில் கடமையாற்றி அனைவரின் பாராட்டைப் பெற் றவர். விசேடமாக நடேஸ்வராக் கல்லூரியில் ஆறு வருடங்கள் ஒருவித லீவும் எடுக்காமல், தொடர்ந்து பணியாற்றி அரசின் நன் மதிப்பைப் பெற்றவர் ஓய்வு பெற்று மூன்று மாதங்களுக்குள் ஓய்வூதிய மும் பெற்றவர். இவைகள் பெரும் சாதனைகள் எனக் கூறுவதில் நான் பெரு மகிழ்சியடைகிறேன்.

தற்சமயம், "எப்படி வரைவது" என்று, அவர் ஆக்கிய நூல் அவரின் அறிவாற்றலை மேலும் பல மடங்கு உயர்த்தியிருக்கிறது. பல உண்மைகளை வெளிப்படுத்தியிருக்கிறது.

அதில் கலையின் சிறப்பு, சித்திர அறிவு, என் பனவும், மற்ற விடயங்களும் உண்மையெனவும், சரியானவைகள் எனவும் நான் ருசுப்படுத்துகிறேன்.



சித்திர ஆசிரியர் வரலாறு, சரித்திரம் என்பனவும் தெளிவாய் உள்ளன.

இதன் மூலம் அவர் மீது நான் பல மடங்கு சந்தோஷமும் பெருமையும் அடைகிறேன்

அவர் மேலும், இத்துறையில் முன்னேற இறை வனின் ஆசியை வேண்டுகிறேன்.

இப்படிக்கு
ஒப்பம் **கே. வீரசிங்கம்**



தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் நடந்த காங்கேசன் துறை வட்டார சித்திரக் கலைக் கண் காட்சியைப் பார்வையிட வந்த யாழ்/ கல்விப் பணிப்பாளர் திரு மாணிக்கவாசகரையும், ஆசிரியர் திரு. வி. பொன்னம்பலம் எம். ஏ. அவர்களையும் பொறுப்பாளர் திரு, எஸ். நடராசா இந் நூல் ஆசிரியர் வரவேற்கும் காட்சிப் படம்.

கொழும்பு பம்பலப்பிட்டி சென் பீற்றர் கல்லூரி
கனம் பாதரும், றெக்டருமாகிய
திரு. எஸ். ஏ. விக்கிரமசிங்கா அவர்கள் அளித்த

# பாராட்டு

**St. Peters' College**
**Colombo - 4** **29th oct. 1967**

This is to state that Mr. S. Nadarajah has been on the tutorial Staff of this College from Feburary to July 1967 as an Art Teacher.

He Proved himself to be a talented Art teacher and took great interest in it. As a teachar he was hard working and devoted to his work.

I have great pleasure in Certifying to his good Character.

**Sgd. S.A. Wicramasingha**
Rector.

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியின்கல
பிரியாவிடை வைபவத்தில்
திரு. எஸ். நடராசா ஆசிரியர் அவர்களை

# வாழ்த்திப் பாடிய பா

எங்கள் நடராசா
 எழிலார்ந்த நற் கலைஞன்
கடமை உணர்வு கொண்ட
 கற்றறிந்த நல் வல்லோன்

அந்த ஒரு நற் பெயரை
 யார் தான் அணிந்தாலும்
அவரிடத்து அருளுண்டு
 ஆக்க சக்தி தானுண்டு.

நுண் கலையைக் கற்பதற்கு
 சென்னை மா நகர் சென்றார்.
கலைக் கல்லூரி யதில்
 காத்திர மாய்த்தான் பயின்றார்.

ஆறு வருடங்கள் தொடந்துமே
லீ வெடுக்கா அரிய நற் பணி யதனை
ஏத்துகிறேன், போற்றுகிறேன்
 எங்குமே சாற்றுகிறேன்.

சித்திர நற் போட்டியிலே
 சிறப்பான பரிசுகளை
சிறுவர் பெறும் வகையில்
 சீராகப் பணி செய்தார்.



அடக்க மது கண்டேன்
 அம்பாளின் சந்நிதியில்
ஆர்வமது கண்டேன்
 ஆத்மீக நெறியதனில்

தூய்மை யது கண்டேன்
 உடை நடை, பாவனையில்
கலைஞர்கள் வாழட்டும்
களி உவகை கூடட்டும்.

இப்படிக்கு
**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**

கவி
கலைப்பேரரசு
**திரு ஏ. ரி. பொன்னுத்துரை பி. ஏ**
ஆசிரியர் சங்கத் தலைவர்.

யாழ் மத்திய கல்லூரி உப அதிபர், திரு. ஜே. சி. சாள்ஸ் அவர்கள் அளித்த

## பாராட்டு

**Jaffna Central College**

**21st Aug. 1956**

To whom it may Concern.

Mr. S. Nadarajah has been a Teacher of Drawing at Jaffna Central College for the last ten months.

He was a methodical and Conscientious Teacher His pupils from standard IV to S S. C. were interested in their work and he maintained a high standerd of discipline.

He has special aptitude for his work. He is good in Board work He has ability for work in oil medium too. He was very helpful in the Exta-Curricular work of the school. He was a loyal assistant and I have pleasure in recommending him. He bears a very good charecter.

Sgd. J. C. Charles
Actg. Principal



சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர், திரு. வி. சுப்பிரமணியம் பி.ஏ.-பி.எஸ்.சி. அவர்கள் அளித்த

## பாராட்டு

**Skanda Varodaya College, Chunnakam**

**9th Jan. 1969**

Mr. S. Nadarajah was an Art Teacher of this College for about one year and six months.


He impressed me much by his Methodical and systematic work. He evinced a good deal of interest and enthusiasm in teaching Art to the students. He was also interested in the young ones entrusted to his care.

At the art Exhibition organised at the circuit level in July 1968 our school was placed second. At the all Ceylon child Art Exhibition held in October 1968, the drawings of three of our students were selected for the finals.

Beside he took an abiding interest in the exra-curricular activities of the College.

He has organising ability and is practical in outlook. His work was Commended by inpecting officers.

Sgd. V. Shuppiramaniam
Principal.



நடேஸ்வராக் கல்லூரி கலைக் கண்காட்சியைத் திறந்து வைத்த காங்கேசன்துறை பாராளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கியூ. சி. அவர்களை பொறுப்பாளர் திரு. எஸ். நடராசா இந் நூல் ஆசிரியர் வரவேற்கும் காட்சிப் படம்.

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி அதிபர்.
திரு. கே. சிவப்பிரகாசம், பி. ஏ. அவர்கள் அளித்த

# பாராட்டு

**Nadeswara College, Kankesanturai**
**20th Sept. 1970**

This is to Certify that Mr S Nadarajah is an Art Teacher of this College from 1-1-1969.

He Teaches art from Grade 5 to Grade 10. His ability to create an interest and enthusiasm work have impressed me very much.

At the all Ceylon Child Art Competition, 1969 our School secured a second Prize and a Consolation Prize

At the all Ceylon Child Art Competition 1969 held by the observer, six students of our school won prizes and certificates.

Our school presented 25 students for the N.P.T.A 8th Std. Examination in 1969. All of them have passed in Art and one secured a subject prize.

He takes keen interest in the Extra - Curricular activities of the College.

I understand that he is the Secretary of the Northern Province Art Teacher's Association, and all Ceylon Art Teacher's Union Secretary also. He bears a very good character.

**Sgd. K. Sivapiragasam,**
**Principal.**

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில்
பணிபுரிந்து 15.8 79 ல் ஓய்வு பெற்ற சித்திர ஆசிரியர்
திரு. எஸ். நடராசாவின் அரிய சேவையைப்
பாராட்டி வழங்கிய

# வாழ்த்துப் பா

அன்பும், பண்பும், அடக்கமும் நிறைந்த
இன்பத் தோற்ற எழில் நடராசா
ஓவியக் கலையை உயிரினும் மேலாய்
மதித்து மத்திய மகாவித்தி யாலய
மாணவர் அதனை மாண்புறக் கற்று
மேனிலை அடைய விருப்புடன் உழைத்த
நல்லோய் அழகுற நானில காட்சியை
எல்லோர் உளமும் ஈர்க்கும் வகையில்
உயிரோ வியமாய் வரைந்திட வல்லோய்
ஆயிர மாயிரம் பாட்டால் ஆன்றோர்
காவியம் பாடிக்காட்டும் உணர்வை
ஓவியம் தன்னில் ஒரு கோட்டிலே
பொற்புறக்காட்டும் அற்புதக் கலைஞ
உன்னதமாக ஓவியக் கலையை
சின்னவர் சிறப்புற சேவைகள் செய்தோய்
சித்திரப் போட்டி பற் பல வைத்து
பரிசில்கள் வழங்கிப் பலரும் போற்றிய
விற்பன்னர் படைப்பை அகில இலங்கை
சிறுவர் சித்திரக் காட்சிக்கு அனுப்பி
உலகக் காட்சி அதிலும் வயாவிளான்
கை வண்ணத்தைக் காட்டிய பெரியோய்
ஆசிரியர்க்கும் அணிகலன் போன்றோய்
பேசுறும் கடமையில் பிறழாது நின்றாய்



ஒவ்வொரு நாளும் ஒழுங்காய் வருதல்
ஏழரை மணிக்கே கையொப்பம் இடுதல்
நன்கொடை வழங்கி நயவுரை கூறி
ஊக்கு வித்து ஆக்கம் காணும்
அரிய பண்பு பெரிது பெரிது
ஓய்வுக் காலம் உன்னத மாகச்
சீரும் சிறப்பும் எய்திப் பேணும்
ஓவியக் கலையால் உலகம் முழுவதும்
பேரும் புகழும் பெற்றே வாழ்க
வாழ்க வாழ்க இனிதே வாழ்க.

இங்ஙனம்
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

கவி ஆக்கம்
**திரு. வி. கந்தவனம்** பி. ஏ. உப அதிபரும், கவிஞரும்.

ஒப்பம் **திரு. சி. கணேசலிங்கம்**
ஆசிரியர் சங்கச் செயலாளர்.
வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்.

முன்னாள் ஓய்வு பெற்ற சித்திரப் பரிசோதகர்
திரு. பி. ஏ. தேவநாயகம் அளித்த

# பாராட்டு

**Mr. B. A. Thevanayagam Inspector of Art (N.P)**
**Education Dept. Jaffna (Ceylon)**
**14th May 1665.**

Mr. S Nadarajah is known to me for the last 15 years.

While he was an art teacher at schools I had occasions to inspect his work. He did very satisfactory work in those schools. Often his students produced good work. He has a definite talent for commercial art, which is very useful to our future generation.

He bears a good moral character.

Sgd. B A. Thevanayagam.
Retired Inspector of Art
(Education Department)



# நன்றிக்கடன் - 1

இலங்கையின் முன்னாள் கல்வி மந்திரி
கனம் ஐ எம். ஆர். ஏ. இரியகொல்ல அவர்களுக்கு

இலங்கையின் முன்னாள் கல்வி மந்திரியாக இருந்த ஒருவர். சித்திர ஆசிரியர் அரசாங்க பாடசாலையில் நியமிக்கத் தேவையில்லையென்று ஏற்கனவே பாராளு மன்ற மூலம் சட்டம் இயற்றியிருந்தார்,

இது சிலருக்குத் தெரியும். சிலருக்குத் தெரியாது. சிலர் வெளிச்சத்தில் விளக்குப் பிடித்துத் திரிந்தார்கள். சிலர் இருளில் வெளிச்சம் தேவையில்லையென்றார்கள். எப்படியோ வெளிச்சம் வந்தபின் யாவரும் மௌனம் கொண்டார்கள்.

மேற்படி சட்டம், அரசாங்க பாடசாலைகளில் சித்திர ஆசிரியர்களை நியமிக்க முடியாமல் குறுக்கேயிருந்தது.

உதவி நன்கொடை பெறும் பாடசாலை அதிபரின், கருணை கிடைத்தால் மாத்திரம் நியமனம் கிடைக்கக் கூடியதாயிருந்தது.

இச் சட்டம் சித்திரக்கலைக்கு இருண்ட, வரண்ட கொடிய காலமெனலாம் இவ் இருளைப் போக்க, கல்லில் நார் உரிப்பது போலக் காட்சி தந்தது அந்தக் காலம். சித்திர ஆசிரியர்கள் பல வருடங்கள் சிறகுடைந்த பறவைகளைப்போல் தடுமாறிய காலமது. சித்திர ஆசிரியர்களும் மனிதர்களாய் வாழக் கோட்டை கட்டி, கலங்கி, மயங்

-கினார்கள். கைகொடுக்க ஆளில்லையே என்று புலம்பினார்கள்.

ஆனால் ஒரு சில சங்கங்களும் தலைவர்களும் இதைச் சும்மா விட்டு விடவில்லை. சோர்ந்து போகவில்லை.

கண்டி நகர் திரு. எஸ் ஏ. விக்கிரமசிங்காவை தலைவராகவும், யாழ்ப்பாணம் திரு. எஸ். நடராசாவை (இந்நூல் ஆசிரியர்) காரியதரிசியாகவும் கொண்ட அகில இலங்கைச் சித்திர ஆசிரியர் சங்கமும்,பல மகாநாடுகள் கூட்டி முறையிட்ட சங்கங்களுள் ஒன்றாகும் இச் சங்கம் 16-01-1961 இல் உதவிக் கல்வி மந்திரியைக் கண்டு சித்திர ஆசிரியரை அரசாங்க பாடசாலையில் நியமிக்க வலியுறுத்தியதும், 26-10-1964 ல் சித்திர ஆசிரியரை அராசங்க பாடசாலையில் நியமிக்காமல் விட்டதும் ஏனோ? என்று துண்டுப் பிரசுரம் வெளியிட்டதும் விசேட செயல்களாகும்.

Why was the appointment of Art **Teachers in Government shool's stopped?**

இப்படிப் பல கிளர்ச்சிகள் பல வருடங்கள், பாராளுமன்றிலும், வெளியிலும் நடைபெற்றன.

இவைகளை அறிந்த உணர்ந்த முன்னாள் கல்வி மந்திரி, திரு. இரியகொல்ல, சித்திர ஆசிரியரை அரசாங்க பாடசாலையில் நியமிக்கக்கோரி பாராளுமன்றில் வாதாடி நிறைவேற்றினார்.

அதன்படி 28-05-1965 இல் விளம்பரம் கோரி 1967இல் தை மாதம் நியமனம் கொடுக்கப்பட்டது.

இலங்கை அரசு விளம்பரம் கோரி சித்திர ஆசிரியரை நியமித்தது சரித்திரத்தில் இதுவே முதன்மையாகும்.



இதனால், தடைச்சட்டம் உடைத்தெறியப் பட்டது. இருள் நீங்கியது. வேலையற்றவர்கள் பணி புரிய, சொந்த இடங்களுக்கு மாற்றப்பட, குறைந்த வேதனம் பெற்று சித்திர பாடம் படிப்பித்தவர்கள் உரிய வேதனம் பெற, வழி திறக்கப் பட்டது, கலங்கிய கலைஞர்கள் துள்ளி யெழுந்தார்கள்.


இத்தனைக்கும் பட்ட சிரமம் ஏமாந்த அலைச்சல், நட்டம், கேட்ட குறை குற்றம், இழந்த செலவு விரயம் எவருக்கும் தெரியாது. ஆனால் எய்தவன் இருக்க அம்புக்கு பரிசு கிடைக்கிறது. வயதெல்லையைத் தாண்டி, பதவி பெறாமல் போனவர்கள் பெற்ற பரிசு, பரிதாபமும் ஏமாற்றமும்தான். இவைகளைப் பழங்கதையென்பார்கள் இலகுவில் புற்றில் புகுந்தவர்கள். சரித்திரம் தெரியாதவர்கள்.

சட்டம் உடைக்கப்படாமல் இருந்தபடி இன்று இருந்திருந்தால் சரித்திரம் விசித்திரமாயிருக்கும்.

இன்று இலங்கை பூராவும் உள்ள மகாவித்தியாலயம் முதல் கல்லூரி வரை சித்திர ஆசிரியரை நியமிக்க முடியும்.

அதன்படி நியமிக்கப்படுகிறார்கள். பாடசாலையில் கலை உயர்கிறது நாட்டில் பல துறைகளில் கலை வளர்கிறது. பலர், பட்டம், விருது, பொற்கிளி, பரிசு என்பன பெறுகிறார்கள்

இவைகளுக்கெல்லாம் முன் நின்ற சங்கங்களுக்கும், தலைவர்களுக்கும், விசேடமாக திரு. இரியகொல்ல அவர்களுக்கும் ஓவிய உலகம் சார்பில் இந்நூல் மூலம் நன்றி கூறுவது நலமாகும்.




தந்தை செல்வா

வரை படம்

வரைந்தவர் இந்நூல் ஆசிரியர்

திரு. எஸ். நடராசா (எஸ். என். ஆர்.)

# நன்றிக் கடன் - 2

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

**திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கியூ சி அவர்களுக்கு**

திரு. செல்வநாயகம், திரு ஐ. எம். ஆர். ஏ. இரிய கொல்லயைப் போலவே அரசாங்கப் பாடசாலைகளில் சித்திர ஆசிரியர்களையும் நியமிக்க வேண்டுமென்ற கோரிக்கையையும், மற்றவைகளையும், அறிந்தும், ஆதரித்தும் இருந்தார்.

1967 ஆம் ஆண்டு தை மாதம் முதன் முறையாகப் பத்து, (10) தமிழர்களையே சித்திர ஆசிரியர்களாக அரசு நியமித்தது.

சித்திர ஆசிரியர்களாக பத்து, தமிழர்களையே நியமித்திருக்கின்றார்கள் எனவும், இன்னும் கூடுதலாக நியமிக்க வேண்டுமெனவும் இந்நூல் ஆசிரியர் திரு. நடராசா, திரு. செல்வநாயகத்துக்குச் சுட்டிக்காட்டி முறையிட்டதும், உடனே கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது தம் தள்ளாத வயதில் மேற்படி திரு. நடராசாவையும் அழைத்துச் சென்று திரு. இரிய கொல்லயைக் கண்டார்.

கண்டு மேலும் கூடுதலாக தமிழர்கள் சித்திர ஆசிரியர்களாக நியமிக்க வேண்டுமெனவும், கூடுதலாக வெற்றிடங்கள் இருக்கின்றன எனவும் கூறினார்.

அதற்கு அவரும் இணக்கம் கூறினார் அதன் பயனாக மேலும் 1967 ஆம் ஆண்டே ஐந்து (5) தமிழர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

இவைகளை என்றும் மறக்க முடியாதசாத னைகளாயிற்று.

ஆவேசப் பேச்சோ, அடுக்கு மொழி, உரக்கப் பேசியோ, அடுத்து அண்டியவரை ஏமாற்றத் தெரி யாத அந்தப் பெரியார், அகிம்சை வீரர், நேர்மை யின் சின்னம் தந்தை செல்வா அவர்களுக்கும் தமிழ்ச் சமூகம் துதி பாடக் கடைமைப்பட்டுள்ளது. இதன் மூலம் அவர்களுக்கும் நன்றி கூறுவது நன்று நன்றி.



## வர்த்தமானப் பத்திரிகைப் பிரதி.

## வித்தியா பகுதி

அரசினர் பாடசாலைகளில் சேவை புரிவதற்கு வரைதல் ஆசிரியர்களைத் தெரிவு செய்தல்.
28–05–1965

**Recruitment of Art Teachers for Service in Government Schools**

Applications are hereby invited from persons of either sex for posts of Art Teacher in Government schools.

Applications which should be substantially in the form given below should be addressed to the Director of Education Est Branch Education Department, Malay Street Colombo-2. And should be forwarded under Registered cover to reach him on or before 18-06-1965. The top left hand corner of the envelop must be clearly marked application for post of Art Teacher.

E. H. de Alwis
Director of Education
18 - 05 – 1965

Education Dept.
Malay Street, Colombo-2

# எப்படி வரைவது

## 1 மகிமை.

காலையில் நாம் துயில் விட்டு எழுந்த பின் செய்வதென்ன? தன்னையேயறியாது நாம் ஒவ்வொருவரும் தன்னைத்தானே சித்தரித்துக் கொள்கிறோம் அங்கே அலங்காரச்சித்திரம் பிறக்கிறது என்பதை உணர்வதில்லை. ஒவ்வொரு மனிதரும் செய்கிற கோலமிது. இக்கோலம் கலைக்கோலமாக மாறுவது எவருக்கும்தெரியாது.

மனிதனுடைய அவயவங்களுள் கண் பிரதான உறுப்பு கண் பார்வையின்றேல் இவ்வுலகம் என்ன என்பதே தெரியாமலிருக்கும். அதேபோன்று ஓவியம், அல்லது சித்திரம் அவசியமானது. சித்திரம் இன்றேல் வாழ்க்கை மற்றும் விடயங்கள் யாவும் இருண்டே காட்சியளிக்கும். சித்திரக்காரன் கண்ணுக்கு இன்பமளிக்கின்றான் கண் மனிதருக்கு மாத்திரமல்ல, கண் உள்ள அத்தனை ஜீவராசிகளுக்கும் இன்பமளிக்கிறது.

சித்திரம் ஒரு மனிதனுடைய உணர்ச்சியை இலகுவில் வெளிப்படுத்த வல்லது. உதாரணமாக ஒரு பிள்ளைக்கு மாம்பழம் அல்லது அப்பிள் பழம் என்று சொல்லிக் கற்பிற்பதைப் பார்க்கிலும், மாம் பழம் அப்பிள் பழம் ஆகிய படங்களைக் காட்டிக் கற்பிப்பது இலகுவானது. இவ்விரு பழங்களின் வேறுபாடுகளை விளக்கிச் சொல்லி, அல்லது வரைந்து காட்டி கற்பிப்பது அதி விசேடமானது இதனால், உறுப்பு, தோற்றம் நிறம்

ஆகியன பிள்ளைக்கு இலகுவில் மனதில் பதிய வாய்ப்புகள் ஏற்படும். இதனால் பிள்ளை படங்களைக் கண்டவுடன் இது இன்னதென்று தானே சொல்ல முற்படும்.

சித்திரமாக, அழகாக இருக்க ஆசைப்படுவதினால் மனிதர்கள் என்றுமே தம்மை அலங்கரிக்க, சித்திரிக்க முற்படுகின்றார்கள். விசேடமாக அழகை உற்பத்தியாக்க விருப்புகின்றார்கள். அழகு, சித்திரத்தின் பிறப்பிடம், சித்திரத்தை அழகுக் கலை, கவின் கலை, நுண் கலை, என்றெல்லாம் கூறுகின்றார்கள்.

ஆதியிலே மனிதன் நாகரிகம் குறைந்தவனாகத் தென்பட்டானாம். இவன் படிப்படியாக நாகரிகத்திலே முன்னேறினானாம். இதற்கு உதவி செய்தவைகளுள் ஓவியக்கலையும் ஒன்றாம் மனிதன் என்று உதித்தானோ அன்றே சித்திரக்கலையும் பிறந்து விட்டது எனலாம்.

அன்று, இலை கொடிச் சாற்றினால், கல், மரங்களினால், கலைப் படைப்புக்களை ஆக்கிய கலைஞன், இன்று நிறங்களினால் தூரிகைகளினால், நுட்பமான ஆயுதங்களினால் ஆக்குகிறான்.

ஓவியக் கலையின் மகத்துவம், நோக்கம், பிரயோசனம் என்பவைகளை அறிய வேண்டும் சித்திரிக்கும் போது அழகு ஏற்படுகிறது. சந்தோஷம் உண்டாகிறது. எவரும் சித்திரமின்றி வாழ முடியாது. அக்காலம் தொட்டு இக்காலம் வரை சித்திரம் அழியா இடம் பெற்றுள்ளது. இதற்குப் போதிய ஆதாரங்கள் இருக்கின்றன. இவைகளுக்குச் சித்திரத்தின் சரித்திரம் சான்று பகரும் ஓவிய



சிற்பக் கலைகளை ஒவ்வொரு மனிதனும் அறிவதால் நன்மையே தவிர தீமை ஏற்படாது. சித்திரம் வரைவதால் நற் குணங்கள் உண்டாகின்றன. ஒன்றை வரையப் போகுமுன் அதன் தன்மைகளை நன்றாய் அறிந்திருப்பது அவசியமாகும்.

நாம் வரையும் பற்பல சித்திரங்களிலும் உயிரே பிரதானமானது. உயிருள்ள பிராணிகள் யாதாகிலும் ஒரு செயலில் இருக்குமாகையால், சித்திரத்தின் செயல்களைக் காண்பிப்பதே உயிரைக் காண்பிப்பதாகும். நாம் எவ்வளவு நிதானமாகவும், அதிக வேலைப்பாடு உள்ளதாகவும் ஒரு படம் வரைந்த போதிலும் செயல்கள், சரியாக இராவிடின் அது கவரத்தக்கதாய் இராது. கருத்து வெளிப்பாட்டுச் சித்திர பாடமுமாகாது. வரைபவர் வரையத் தொடங்குமுன் செயலை மெல்லிய கோடுகளால் வரைந்த பிறகு, வேலைப்பாடுகளை படிப்படியாக வரைவது இலகுவாகும். ஒற்றைக் கோடுகளால் செயல்களைக் கீறிப் பழகுவதே ஆரப்ப அறிவு உதயமாக உதவலாம்

ஆனால் சித்திர அறிவு குறைந்த பாமர மக்களும், கூடிய அறிவு உடையவர்களும் இலகுவில் புரிய வரைவது நன்மையாகும். சித்திர விற்பனர்கள் தங்கள் கூரிய உச்சத்தில் வரைந்து இதுதான் சித்திரம் ஓவியம் என்று வலியுறுத்தி, மற்றவைகளை, தரம் குறைப்பதும், பழமை என்று எளிமைப் படுத்துவதும் உசிதமானதுமல்ல உகந்த அறிவுடையதுமல்ல.

## 2 வரைவதற்கு தேவையானவை

சித்திரம் ஆக்குவதற்கு வட்டம், சதுரம், நீளம், அகலம், நீள்சதுரம், முக்கோணம், அரை வட்டம், கால் வட்டம், பரிமாணம் என்பன தேவைப்படலாம்.

சித்திரம் ஆக்கும்போது அழகு, உயிர்த் தன்மை கவர்ச்சி, கருத்து, அறிவு, என்பவைக ளைக் காட்டி வரையலாம்.

மற்றும், சந்தோஷம், துக்கம், கோபம், சாந்தி, வீரம், பயம், பக்தி போன்றவைகளை வெளிப்படுத்தி வரைவது சிறந்ததாகும்.

சித்திரத்தை, வட்டக் கோடு, அரை வட்டக் கோடு, கால் வட்டக்கோடு நீர்மட்டக்கோடு, நிலைக்கோடு மூலை மட்டக்கோடு அலைக்கோடு ஒழுங்கற்ற கோடு, சுருட் கோடு, வளை கோடு போஸ்டர் கோடு ஒழுக்குக் கோடு, நேர்கோடு லம் பக் கோடு. ஆகிய கோடுகளினாலும் வரையலாம், இதில் நிலைக் கோடு நீர் மட்டக் கோடு வம்பக் கோடு மூல மட்டம், சதுரம், நீள் சதுரம், வட்டம். முக்கோணம் மிக முக்கியவைகளாகும் இவைகளின் தோற்றம் பிரயோசனம் அறிந்து வரைவது நன்று.

நீர் மட்டக் கோடு, லம்பக்கோடு, நிலைக் கோடு மூலமட்டக்கோடு வட்டக்கோடு என்பன அதிமுக்கிய கோடுகளாகும் இவைகள் சித்திரம் வரைவதற்கும் தொழிற் துறைக்கும் அவசியம் தேவைப்படுவனவாகும்.- சிவப்பு, மஞ்சள் நீலம், செம்மஞ்சள், ஊதா, பச்சை, சிவப்பு - ஊதா, மஞ்சள் – பச்சை முதலிய நிறங்களினாலும் வரையலாம். தேவையான இடங்களில் கறுப்பு வெள்ளை நிறங்களைப் பாவிக்கலாம். கழிவு நிறத் துணி. கழிவு நிறக் கடதாசி மெல்லிய சிறிய மரப்பட்டைகள், விதைகள் முதலிய வகைகளா லும் சித்திரங்களை ஆக்கலாம்.



## 3 நிலை - சாதனம்

சித்திரம் வரைபவர் ஆர்வம் உள்ளவர்களாய், பொறுமை, நிதானம் உள்ளவர்களாய் இருப்பது நலம்.

சித்திரம் வரைவதால், பொறுமை, அன்பு, யோசிக்கும் தன்மை நிதானம். புத்தி, இயற்கை, செயற்கை. அறிவு போன்ற குணங்கள் விருத்தி யடைகின்றன.

சித்திரம் வரையத் தொடங்கும்போது வரை பவர் பலவித முறைகளைக் கையாளலாம்.

வரையும் சாதனம், தூய்மையாகவும். வரை யும் கருவி மென்மையாகவும், கூராகவும் இருப் பது நன்று. மற்றும் கைகள். தூரிகைகள், சித்திரத் தின் சுற்றாடல் தூய்மையாயும் இருப்பது நலம்.

**The Pencil is the most Necessary of all materials**

வரைவதற்கு பென்சில் மிக உபயோகமான உப கரணங்களில் முக்கிய பொருளாகும்.

மற்றும் அழித்துத் துப்பரவு செய்யும் கருவி (உயிர்நாடி Rubber) வரைதல் கடதாசிகள் (Drawing Papers) என்பவைகளும், முக்கிய பொருள்களாகும்.

அடி மட்டம், வட்டமிடும் கருவி, மூல மட்டம். நீர் மட்டம், போன்ற கருவிகளும், தேவையான பொருள்களாகும்.

கடதாசியில் மென்மையான பென்சிலினால் (Drawing Pencil) வரைய வேண்டும் வரையும் போது ஊன்றி வரையக்கூடாது. வரையும் பென்சில் கூராகவும் சுத்தமாகவும் இருக்க வேண்டும்; இப்படியிருப்பின் வரையும்போது, பிழைகள் ஏற்படின் அழிக்கும் கருவிகள் அதிகம் தேவைப்படாது.

நில அளவுப்படம் வரைபவர், கட்டுப்பாடுகளைக் கைக்கொண்டு வரைய வேண்டும். அப்படியே மற்ற துறையினரும். கவனத்திற் கொண்டு வரைய வேண்டும்.

வரையும் விற்பனர்கள் எதுவித அடையாளமுமின்றி ஒரே முறையில் தான் வரைய நினைத்ததை வரைந்து முடிப்பார்கள். அது அவரவர் கெட்டித்தனங்களைப் பொறுத்த விடயம். தண்ணீரினால் மெல்லிய தூரிகை மூலம் வெளிக் கோடுகளை இட்டும், நிறச் சாதனங்கள் மூலமும் வரையலாம். பொதுவாக மேற் கூறிய விடயங்களை மனதிற் கொண்டு வரைவது நலம்.

# 4 சிறு பிள்ளைகள்

சிறு பிள்ளைகள் எதையும் எப்படியும் வரையலாம். அவர்களை எதுவும் கட்டுப்படுத்தாது அப்படி வரைய வேண்டும் இப்படி வரையவேண்டுமென்று வலியுறுத்த முடியாது. எப்படியும் வரைவதில் ஏதோ ஒரு இன்பம் அவர்களுக்கு ஏற்படும்.



அவ் மகிழ்ச்சியை எவரும் குழப்பக் கூடாது. சிறு பிள்ளைகளை, சித்திரம் வரையக் குறிப்பிட்ட சாதனங்கள் தான் வேண்டுமென்று கட்டாயப் படுத்துவது உசிதமல்ல.

அவர்களை, நிலத்தில். விதைகளை, சிறு கற்களை சிறுமரத்துண்டுகளை அடுக்கி வைத்துக்காட்டி வரையும் ஆர்வத்தைத் தூண்டலாம். நாள்கள் செல்லச். செல்ல, வயது ஏற ஏற, வகுப்பு உயர உயர. சூழ்நிலையைக் கவனித்து மற்றைய சாதனங்கள் மூலம் வரையலாம்.


சிறு பிள்ளைகள் திடீர் திடீரென, தாங்கள் நினைத்தவுடன். உற்சாகம் (Mood) ஏற்படும்போது நிலத்திலோ. சுவரிலோ வரைய முற்படுவார்கள். சிலநேரம் தாறுமாறாக வரைவார்கள் அப்படியும் அவர்கள் வரையலாம்.

இதைப்பார்த்த, வளர்ந்த சிலர் சீற்றம் கொள்வார்கள். சிலர் சந்தோஷம் அடைவார்கள்

ஏதோ ஒரு வட்டக் கோட்டைப் போட்டு. மாம்பழம். தோடம்பழம். என்பார்கள். நீள் கோட்டை உருட்டிப் போட்டு அப்பா. அம்மா பூனை, நாய், கோழி, ஆடு, மாடு என்பார்கள்

இது ஆரம்ப அறிவு, ஆர்வம் உதயமாகிறது எனலாம் இதை உணராதவர்கள், அறியாதவர்கள் கண்டிக்க முற்படுவார்கள். குறை சொல்லாமல், சீற்றம் கொள்ளாமல் உற்சாகப்படுத்துபவர்களும் பொறுமையாய் இருப்பவர்களும் விடயம் அறிந்த சித்திர அறிவு நிரம்பியவர்களுமாவர் எனலாம். சித்திரம் கற்பிக்கும் ஆசிரியர்களின் கடமையும் இதுவெனலாம். இப்படிச் செய்யின் சிறு பிள்ளைகள்

நாளடைவில் சித்திரக்கலையில் இலகுவில் முன்னேற வாய்ப்புஏற்படும். பிழைகளைக் காணின் எடுத்தவுடன் பிழைகளைக் கூறாமல் படிப்படியாக, மெதுவாக, மெல்ல மெல்ல கூறித் திருத்த முற்படுவது பிள்ளைகளின் ஆர்வம் குறையாமல் இருக்குமெனலாம்.



# 6. அறிவு

வயது ஏறினவர்கள், எந்நாளும் சிறு பிள்ளை களாக இருக்க முடியாது. அனுபவம், ஆற்றல், வளர, வளர சித்திர அறிவையும் பெருக்கிக் கொள்ளலாம். அப்போதுதான் இவர்களின் மேல் சட்டம் கை வைக்கத் தொடங்கும்.

சட்டம் உச்சக்கட்டத்தை அடையும்போது, வெறுப்படைந்து இப் பாடத்தையோ, தொழி லையோ கைவிடப் பார்ப்பார்கள். இதற்குத்தான் ஆர்வம், பொறுமை, நிதானம், சகிப்பு, உள்ளவர் களாக இருக்கவேண்டுமென்று கூறியது.

ஒரே அளவான, ஒரேவிதமான நிறமுடைய பல பொருள்களைத் தனக்குச் சமீபமாக ஒரு இடத்தில் வைத்துப் பார்க்கும் போது, அளவு நிறம் எல்லாம் ஒரே விதமாயிருக்கும் அவைக ளைப் படிப்படியாக தூரத்தில் வைத்துப் பார்க் கும்போது அளவு, நிறம் எனும் தன்மை குறைந்தே காணப்படும். இது இயற்கைப் பொருள் களுக்கும் செயற்கைப் பொருள்களுக்கும் பொருந் தும்

உதாரணமாக ஒரு நீளமுள்ள நேராக உள்ள தெருவில் உள்ள மின் கம்பங்களையோ தந்திக் கம்பங்களையோ கவனித்துப் பார்க்க இதன் உண்மை தெரியும். ஆகையால் சமீபம், தூரம் என்பன கவனித்து வரைவது உசிதம்.

மக்கள், பூக்களை, ஆபரணங்களை, உடை களை, நவீன அழகுசாதனப் பொருள்களை, நல்ல ஓவியங்களைப் பார்க்க விரும்புவார்கள் பார்த்து மகிழ்ச்சியடைவார்கள்.

ஒரு வாழை மரத்தை வழைக் குலையுடன் வரைவது இயற்கை. இரு குலைகளுடன் வரைவது, இயற்கைக்கு மாறானது. குலைகளுடன் குருத்தும், சேர்த்து வரைவது மிகவும் மாறானது. ஆகையால் இவைகளையும் கவனித்து வரைய வேண்டும்.

கண்காட்சிகள், பத்திரிகைகள். சித்திர நூல்கள், முதலியவைகளில் அக்கறை கொண்டு அவைகளில் இருந்து பெறக்கூடிய அறிவைப்பெற்று வரைய முன்வரலாம்.

ஓய்வான நேரங்களில் அமைதியான இடங்களில், ஓவியங்களை வரைவது மிகவும் மேலானது எனலாம்.

கைத்தொழில்கள். கமத்தொழில்கள் சிறந்த முறையில் செய்வதற்கு, சித்திர அறிவு அதிகம் உறுதுணைபுரியுமென்பதை மறக்கப்படாது, மறுக்கப்படாது.

பாடசாலையில் படிக்கும்போது சித்திர பாடத்தையும், கவனமாகப் படித்தால் நலமே தவிர தீமையேற்படாது.

## 7 பாடசாலைகளில் சித்திரம்

இலங்கையிலுள்ள பாடசாலைகளிலும், சித்திர பாடம் படிப்பிக்கப் பணிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு இலங்கை அரசு இயன்றதைச் செய்திருக்கிறது. ஆனால் படிக்கும் உணர்ச்சியும். படிப்பிக்கும் வேகமும், ஆமை வேகமெனலாம்.



ஆனால் இதன் நன்மைகளை உணர்ந்தவர்கள் முயல்வேகத்தில் சென்று கொண்டிருக்கின்றார்களெனலாம்.

சித்திர பாடத்தில் வரையும் பகுதி எழுதும் பகுதியென இரு பிரிவுகள் இருக்கின்றன.

வரையும் பகுதியில், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரம் அலங்காரம், பொருள் சித்திரம், தாவரச் சித்திரம். இரேகைச் சித்திரம், ஒட்டுச் சித்திரம், உருவம் செய்தல், உயிரோவியம், எனப் பல பாடவகைகள் இருக்கின்றன.

இப் படங்களை. நீர் வர்ணம். எண்ணெய் வர்ணம், நிறக்கட்டி வர்ணம், தூள் வர்ணம், போஸ்டர் வர்ணம், இயற்கைப் பொருள் வர்ணம் என்பவைகளால் ஆக்கலாம். அவரவர் நாட்டில் உள்ள மூலப் பொருள்களினாலும், நிறங்களைத் தயாரித்தும் வரையலாம்.

சித்திரங்களில் நுண்கலைச் சித்திரம், விளம்பரச் சித்திரம் கிறுக்கல் சித்திரம். கேலிச் சித்திரம், ஒட்டுச் சித்திரம் எனப் பல பிரிவுகள் உள்ளதெனலாம்.

நுண் கலைச்சித்திரம். அதன் மகிமையை வெளிப்படுத்தி வரைய வேண்டும். இல்லையேல் வேறு வகைகளில் அடங்கிவிடும். இவைகளுக்கெல்லாம் மூலம் வர்ணங்களே.


இவைகளுக் கெல்லாம், இச்சிறு நூல் மூலம் விடையளிக்க முடியாது. ஆனால் எப்படி வரைவதென்ற வினைச்சொல்லுக்கு விடை கூறவேண்டுமென்ற பொறுப்பும், கடமையுமுண்டு.

எழுதும் பகுதி. அது ஒரு பெரும் பகுதி. அதில், கலையின் சிறப்பு, சித்திர அறிவு, சித்திரத்தின் சரித்திரம், என்பவைகள் அடங்கும். இதற்கென எழுதப்பட்ட நூல்களை வாசித்துப் பயன் பெறுவது நலம்.

## 8 கருத்து வெளிப்பாட்டுச் சித்திரம்

வரையும் பகுதியில், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரம் முக்கிய பாடமாகும். இதில் கருத்து முக்கியம். இதைக் கவனித்து வரைய வேண்டும். கருத்தோடு, அழகு, சமம், நிறை, கவர்ச்சி, என்பன காட்டி வரைய வேண்டும். ஆனால் சிறு பிள்ளைகள் இதில் விதி விலக்குப் பெற்றவர்களாவர்.

ஒரு கிராமத்தில் மழையுடன் காற்றும் சேர்ந்த காட்சி வரையும் போது. கிராமம், மழை பெய்யும் வினை, காற்று வீசும் வினை. கவனித்தும் கிராமம், பட்டினம் கவனித்தும் வரைய வேண்டும். மழையில் மனிதர்கள் குடை போன்ற வற்றைப் பிடித்துச் செல்வதையும் வரையலாம். காற்று வீசும் செயல், அங்குள்ள மரங்கள், வீட்டுக் கூரைகள் காற்றின் திசையுடன் சரிந்தும். வளைத்தும், அசையும் தன்மைகளை வரையலாம். மற்றும் மழை வந்தவுடன் என்னென்ன வினைச் செயல்களைக்காட்டி வரைய முடியுமோ அவைகளை காட்டி வரைவதும் நன்று. கொடுக்கப்பட்ட கேள்விக்குரிய விடைகளை எல்லாப் பாகங்களிலும் நிரப்பி வரைவதும் எல்லா இடமும் கவர்ச்சியாக இருக்க வரைவதும் நன்று.



## 10 அலங்காரம்

அலங்காரச் சித்திரம், உலகில் காணப்படும் ஒவ்வொரு பொருள்களிலும், மறைந்தும் வெளிப் பட்டும் காணப்படுகின்றன. இதில் முக்கியம் "ஒன்றைப் போல ஒன்று இருக்க வேண்டும் என்பது'' ஆபரணங்கள், ஆடைகள், பாதரட்சைகள், என்பவற்றில் அலங்காரம் நிறைய இருக்கின்றன. தொழிலாளர்களின் திறமை, சித்திர அறிவு, மலிந்து இருக்கின்றன. நுட்பம், கூரிய அறிவு ஆற்றல், என்பன வெகு நுட்பமாய் காட்சிதருகின்றன. எனவே இவைகளைக்கவனித்து வரைய முற்படவும்.

## 11 பொருள் சித்திரம்


பொருள் பார்த்து வரைதல், சித்திரத்தில். இயற்கை, செயற்கை கவனித்து வரைவதும். கண் மட்டம். மேல், கீழ், நேர், பக்கம் கவனித்து வரைவதும் நன்று.

பழ வகைகள், காய் வகைகள் பெட்டி பாத்திரங்கள் போன்ற எப் பொருள்களும். வரைவது பார்வை. தட்டை திரட்சி என்பன காட்டி வரைய வேண்டும். ஆயுதங்களுடனும், ஆயுதங்கள் இல்லாமலும் வரையலாம். கோடுகள், நிறங்கள் மூலமாயும் வரையலாம்.

இப்படியே தாவரச்சித்திரங்களையும், இரேகைச் சித்திரங்களையும், கவனித்து வரைய வேண்டும்.

தற்சமயம் இரேகைச்சித்திரங்கள் கேலிச்சித்திரங்களில் தோற்றமளிக்கின்றன. கேலிச்சித்திரங்கள் பல வித கேலிகளுக்கும், விளம்பரங்களுக்கும் பயன்படுவதைக்காணகூடியதாய் இருக்கின்றன.

ஓவியர்கள், தங்கள் வல்லமையினால், ஓரிரு கோடுகளால் விடயத்தைப் புரியவைப்பது வியப்பைத்தருவதாய் இருக்கின்றன. மெச்சப்படுத்தப்படுவதற்கு உகந்ததாய் அமைகின்றன.



## 13 உயிரோவியச் சித்திரம்

உயிரோவியச் சித்திரம், சித்திர பாடவகைக ளில் மிக மிகக் கவனமாக வரையவேண்டிய பாட மாகும். பாடவரிசையில் கடைசிப் பாடமாகும். மனித இனத்தை, வேறு உயிருள்ள இனத்தை ஞாப கத்தில் வைத்தும், முன் இருத்தியும் வரையலாம்.

இயற்கைப் பொருள்களில் மனித உருவம் வரைதலே பாலர்களுக்கு அதிக சந்தோஷத்தைக் கொடுக்கக் கூடியது.

மனித உருவப்படம் சித்திர வேலைப்பாட்டு டன் வரைதல் அதிக கடினமாகையால், ஆரம்பத் தில் ஒற்றைக் கோடுகளால் வரைய உதவியாயு மிருக்கும்.

## 14 உருவம் செய்தல்

உருவம் செய்தலுமொரு பாடமாகும். உருவங் களை, களிமண், மரம், கல், சீமேந்து, மற்றும் தங்கம், வெள்ளி, பித்தளை, செம்பு போன்ற உலோகங்களாலும் செய்யலாம். உருவங்களை, அசையா உருவம், அசையும் உருவம் செதுக்கல் உருவம் என பல வகைகளாக்கலாம். மேற்படி பாடவகைகளும் மற்றும் பாடங்களும் பாடசாலை களில் படிப்பிக்கப்படுகின்றன.

## 15 சித்திர ஆசிரியர்

இலங்கையிலுள்ள பாடசாலைகளில், தற்சமயம் சுமார் ஐந்து வகைத்தராதரம் உடையோர் சித்திர பாடம் கற்பிக்கிறார்கள். இவர்கள் எல்லோருக்கும் ஒரேவிதமான (அளவு) வேதனம் இல்லை. ஆனால் எல்லாப் பிரிவினையும் சித்திர ஆசிரியர் (Art Teacher) என்றே அழைக்கிறார்கள். தராதர வேறுபாடு. சம்பள வேறுபாடு இவர்களுக்குண்டெனலாம்.

முதற் பிரிவில், 10 ஆம் 11 ஆம் வகுப்புக்களில் சித்திர பாடத்தில் சித்தியெய்தி, மிகக்குறைந்த வேதனத்தில் கடமை புரிபவர்கள்.

இரண்டாம் பிரிவில், 1949 ஆம் ஆண்டுக்கு முன் சித்திர ஆசிரியர் தராதரப் பத்திரம் பெற்று, குறைந்த வேதனத்தில் கடமைபுரிபவர்கள். மூன்றாம் பிரிவில் 1949 ஆம் ஆண்டுக்குப் பின் சித்திர ஆசிரியர் தராதரப் பத்திரம் பெற்று, கூடிய வேதனத்தில் கற்பிக்கிறவர்கள். நாலாம் பிரிவில். இலங்கை நுண்கலைக் கல்லூரித்தராதரப் பத்திரம் பெற்றவர்கள். ஐந்தாம் பிரிவில், இந்தியா இங்கிலாந்து போன்ற வெளிநாடுகளில் சித்திரம் படித்துத்தராதரப் பத்திரம் பெற்றுக் கற்பிக்கிறார்கள். இவர்கள் தற்சமயம் இலங்கையில் குறைவாகவே தென்படுகிறார்கள்.

எவர் எப்படியாயிருப்பினும் அவர்களிடமிருந்து பெறக்கூடிய அறிவைப் பெற்றும் வரையலாம்.



## 16 பொது

பணத்தாள், முத்திரை ஆகிய வற்றில் காணும் ஓவியம் அலங்காரம் யாரால் உருவானது என்பதை உணராமல். பணத்தை பக்குவப் படுத்துவதிலே தான் கண்ணும் கருத்துமாய் இருக்கிறார்கள். அங்கே ஓவியன் இருக்கிறான் என்பதை மறந்து விடுகிறார்கள்.

ஒரு பூ மாலை ஆக்குவதற்கு பூவும், நாரும் அவசியம் தேவை. அதே போல ஒரு நூல் பத்திரிகை என்பன ஆக்குவதற்கு எழுத்தாளனும், ஓவியனும் தேவை

ஒரு உற்சவச் சடங்கு போன்ற ஊர்வலங்களுக்கு மேளம் போன்ற இசைக் கலைஞர்கள் முன் செல்வது போல, ஒரு நூலுக்கு அல்லது ஒரு பத்திரிகைக்கு முன் செல்வது ஓவியனின் படைப்பே. ஓவியம் இன்றி ஒரு நூலோ, பத்திரிகையோ செயற்பட்டால், அது உப்பில்லாப் பண்டம் போல் இருக்கும்.

வரைகிறவர்கள் யாவரையும் வியப்புற வைக்க வரைய வேண்டும். ஓவியனும் தேவைதான் என நினைக்க வரையவேண்டும்.

எச்சித்திர வேலைகளையும் ஒரு கண்காட்சியில் வைத்தால் அதைப் பார்ப்பவரை அதன் முன் அதிக நேரம் பார்த்து இரசித்து நிற்கக் கட்டி வைக்க வேண்டும். கட்டுவதென்றால் கயிற்றால் கட்டுவதல்ல. சித்திரத்தில் உள்ள இரசிக்கும்

தன்மைகளின் மூலம் கட்டிவைக்கவேண்டும். அப்போது தான் வரையப் பட்ட ஓவியத்தின் திறமை வெளிப்படும்.

அழகிய தெய்வத்தின் தோற்றங்களை வரைகிற சக்தி, அழகிய சிலைகளைப் படைக்கிற சக்தி, அறிவு. நிதானம் ஓவிய சிற்பக் கலைஞர்களுக்கே அதிகமுண்டென நிரூபிக்கத்தக்கதாய் வரைய வேண்டும். சிலைகளை ஆக்க வேண்டும். அப்போது தான் ஓவியனை அலட்சியம் செய்கிறவர்கள், அவன் ஆக்கிய கடவுள் படத்தைப் பார்த்து வணங்குபவர்கள் வெட்கப்படுவார்கள். ஆனால் ஓவியனை மறந்து, சிற்பியை மறந்து, அவன் ஆக்கிய கடவுள் படத்தை வணங்குகிறார்கள். சிலையை ஞபகார்த்தமாக வைக்கிறார்கள். இது எவருக்கும் தெரியாத புதிராகவே உள்ளது.

ஆகவே ஓவியனை, சிற்பியை மதித்துப்போற்ற வரைபவர் வரைய வேண்டும். அறியாமையின் இருளில் கிடப்பவர்களை, தட்டியெழுப்ப வரைய வேண்டும். அதுவே அப்படி வரைய வேண்டும், இப்படி வரையவேண்டும், எப்படி வரைய வேண்டும் என்பதற்கு மறுமொழிகளுள் ஒன்றாகவும் அமையலாம்.

ஆனால் ஓவியக் கலைகளை, கலைஞர்களை, போற்றுபவர்களும், சிந்திப்பவர்களும் இல்லாமலில்லை. இருந்தும் யாவரும் ஓவிய சிற்பக் கலைகளை, கலைஞர்களைப்போற்ற வேண்டும், புகழ வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.



## குறிப்பு

நூலில் காணப்படும் செய்கை முறைப் படங்களும். விடயங்களும் இது மாத்திரம்தான் விதி. வழிமுறை, சட்டம் என்று கூறவும் இல்லை, கட்டாயப்படுத்தவும் இல்லை.

சித்திரம் வரைய, பல வழிகள் உள்ளன. அவைகளில் இவையும் ஒரு வழியேயாகலாம்.

# கலை

கல்லைக் கல்லாய்க் காண்பவன் மனிதன்
கல்லைக் கலையாய்க் காண்பவன் கலைஞன்
கல்லைக் கடவுளாய், காண்பவன் ஞானி.

புனித வளன் கத்தோலிக்க அச்சகம்
யாழ்ப்பாணம் 1999.